குளியாப்பிட்டி நகர சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குளியாப்பிட்டி நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 181(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் குளியாப்பிட்டி நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் சபையினால் 05 வழக்குகள் நடாத்திச் செல்லப்படுவதுடன் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை. அந்த வழக்குகளுக்காக மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையில் வழக்கு கட்டணமாக சபை நிதியத்தில் இருந்து ரூபா 136,000 செலுத்தப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறுவனத்தில் நடைபெறுகின்ற சகல சம்பவங்களும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு டெக்டர் டேலர் மற்றும் ஸ்கவேட்டர் இயந்திரத்தின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி முறையே ரூபா 800,000 மற்றும் ரூபா 2,500,000 ஆக இருந்த போதும் அவை ரூபா 400,000 மற்றும் ரூபா 3,850,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மோட்டார் வாகனக் கணக்கின் பெறுமதி ரூபா 950,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 662,000 வாகனம் நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல சொத்துக்களும் நிதிக் கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ள ரூபா 3,733,695 ஆன சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி ரூபா 141,257,101 ஆக இருந்த போதிலும் அது ரூபா 138,068,808 ஆக ரூபா 3,188,293 குறைத்துக் கணக்கீடு செய்யப் பட்டிருந்தது.	ரூபா 3,188,293 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டுள் ளது.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(உ)	உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி ரூபா 42,855,935 ஆக இருந்த போதும் அது ரூபா 41,411,444 ஆக ரூபா 1,444,491 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான பெறுமதியில் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 99,000 ஆக இருந்த போதும் ரூபா 297,031 ஆக ரூபா 198,031 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானத்தின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டின் மோட்டார் வாகனம் மற்றும் வண்டி மீள் மதிப்பீட்டு நட்டம் ரூபா 245,290 ஆக இருந்த போதும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 704,100 இலாபமாக மோட்டார் வாகனம், வண்டி கணக்கு மற்றும் மூலதனத்திற்கான வருமான பங்களிப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக மீள் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முற்சக்கர வண்டி தரிப்பிட வருமானம் ரூபா 137,100 கணக்கீடு செய்யப்படா திருந்ததுடன் வாடகை வாகன தரிப்பிடக் கட்டண வருமானம் ரூபா 151,950 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஐ)	மீளாய்வாண்டிற்குரிய பொழுதுபோக்கு வரி வருமானம் ரூபா 742,529 ஆக இருந்த போதும் அது ரூபா 549,120 ஆக ரூபா 193,409 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பெற வேண்டிய களியாட்ட வரி வருமானம் ரூபா 182,909 நடை முறைச்சொத்தாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினம் தனித்தனியாக இனங்காணக்கூடிய பிரகாரம் விரிவான பரீட்சை மீதி சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான பரீட்சை மீதி தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஔ)	மீளாய்வாண்டின் சுடலைக் கூடத்தின் வருமானம் ரூபா 3,963,045 ஆக இருந்த போதும் அது ரூபா 2,089,600 ஆக ரூபா 1,873,445 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		இணங்காமைகள்	கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
	570 மற்றும் 571	02 வருட காலத்தை விஞ்சிய ரூபா 4,911,712 ஆன 314 வைப்புக்கள் தொடர்பான நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	விடுவிக்கக்கூடிய வைப்புக் களை எதிர்காலத்தில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2018 திசம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 04/2018 என்ற நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் வழிகாட்டி			
(i)	2 ஆம் பந்தி	அரசாங்கத்தின் நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடும் போது அவற்றின் பெறுமதி சரியாக கணிப்பிட வேண்டி யிருந்த போதிலும் சபையின் வாகனங்கள் தவிர ஏனைய சொத்துகள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	சகல வாகனங்களையும் மீள்மதிப்பீடு செய்யப்பட் டுள்ளதுடன் ஏனைய நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது.	நிலையான சொத் துக்களின் நியாயமான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்காக சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.
(ii)	03 ஆவது மற்றும் 04 ஆவது பந்திகள்	நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடும் போது ரூபா 5,000 அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடன் நிதியல்லாச் சொத்துக்கள் இனங்காண வேண்டியிருந்த போதிலும் சபையினால் ரூபா 5,000 இற்கு குறைந்த தளபாடம் மற்றும் பொருத்திகளில் 68 விடயங்கள் மற்றும் 07 இயந்திர உபகரணங் விடயங்கள் நடைமுறையல்லா சொத்தாக குறிப்பிடப்பட்டி ருந்தது.	ரூபா 5,000 தொகை யினை விட குறைவான நிலையான சொத்துக்களை ஏடுகளிலிருந்து அகற்றி ஏடுகளைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறுவனத்தின் சரியான நிதி நிலைமைகளை வெளிப்படுத்துகின்ற முறையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் (பற்றாக்குறை) ரூபா 14,212,876 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் (பற்றாக்குறை) ரூபா 39,671,397 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	28,625	28.947	30,067	24,932	28,675	28,288	25,737	28,860
ii.	வாடகை	30,530	29,532	24,736	4,555	216,636	25,075	24,524	3,609
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	20,920	24,261	21,559	-	17,930	21,087	3,907	-
iv.	ஏனைய வருமானம்	170,207	189,169	151,729	17,977	210,903	138,079	154,288	13,270
	மொத்தம்	250,282	271,909	228,091	47,464	474,144	212,529	208,456	45,739

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறான ரூபா 45.74 மில்லியன் நிலுவை வருமானத்தில் மற்றும் ரூபா 242.99 மில்லியனான ஆண்டில் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் ரூபா 228 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 47.46 மில்லியன் மேலும் நிலுவையாகக் காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் கடந்த ஆண்டின் இறுதியில் நிலுவை வருமானமும் சேர்க்கப்பட்டு சேகரிக்கப்பட்ட வருமானம் கழிக்கப்பட்ட பின்னர் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் பெறவேண்டியிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் இந்தத் தொகைகளுக்கிடையே பரஸ்பர வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களில் காணப்படுகின்ற பரஸ்பர வேறுபாடுகளை சரி செய்து சமர்ப்பிக்கப்படும்.	சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(இ)	**வீதவரியும் வரியும்**		
(i0	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவை ரூபா 24,932,458 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 20,445,409 மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து நிலுவையாகக் காணப்படுகின்ற ரூபா 4,487,049 மீதியும் காணப்பட்டது.	நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை வருமானங்களை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நகர சபையினால் இறுதித் தடவையாக வாடகை வரி மதிப்பீடு மேற்கொண்டு 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கால ரீதியில் வரி மதிப்பீடு மேற்கொள்ளாமையின் காரணமாக ஆதனங்களின் தற்போதைய நிலைமை மாற்றமடைந்ததன் அடிப்படையில் கணிப்பிட முடியாத ஆதனவரி வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு மேற்கொள்ளுமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.	சட்டத்தின் எற்பாடுகளின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மதிப்பீடு மேற் கொண்டு அறவிடப்படல் வேண்டும்.
(ஈ)	**வாடகை** மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வாடி வீட்டு வாடகை நிலுவை மீதி ரூபா 2,662,969 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது எந்தவொரு வருமானமும் கிடைத்திருக்கவில்லை.	விருந்தினர் விடுதி நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக தொடர்ச்சியாக எழுத்து மூலம் உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனத்தின் முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்ட பின்னர் நிலுவைப் பணத்தை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக நகர சபை அறிவித்துள்ளது.	நிலுவை வாடகையினை விரைவாக அறவிடல் வேண்டும்.
(உ)	**ஏனைய வருமானம்** மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 80,700 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,010,670 ஆகும்	2025 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	உரிய பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் 04 விடயங்கள் தொடர்பாக மாத்திரம் சபையினால் உப விதிகள் விதிக்கப் பட்டிருந்தது.	உப விதிகள் 37 அங்கீகரிக்கப்பட்டதுடன் சபையினால் 04 உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நடமாடும் வியாபாரத்திற்கான உப விதிகள், மயான நிலங்கள் மற்றும் சுடலைக்கூடங்களுக்கான உப விதிகள், வாராந்த சந்தை உப விதிகள் வரைவு செய்யப்பட்டுள்ளது.	உப விதிகளை விதித்து சபையின் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ஆண்டில் உக்குகின்ற கழிவுப் பொருள் 1,655 தொன் சேரிக்கப்பட்டதுடன் கூட்டுப்பசளை கிலோ கிராம் 58,885 உற்பத்தி செய்து கிலோ கிராம் 35,430 விற்பனை செய்யப்பட்டு ரூபா 608,100 வருமானம் மற்றும் உக்காத கழிவுப் பொருட்கள் கிலோ கிராம் 22,989 விற்பனையில் ரூபா 508,514 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக மீண்டெழும் செலவினமாக ரூபா 20,774,085 செலவிடப்பட்டிருந்தது.	கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு பாதகமாக சுற்றாடல் தாக்கம், சமூக எதிர்ப்புக்களுக்கான தீர்வினை வழங்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் இலாப நோக்கம் அல்லாமல் இந்த செயற்திட்டம் சுற்றாடலுக்கு சாதகமான செயற்திட்டமாக இருந்தமையால் வருமானத்தை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தி மக்களுக்கு சிறந்த சுற்றாடலொன்றை உருவாக்கி சபையின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 04 கணக்குகளின் பெறுமதி ரூபா 32,400,542 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 27,913,493 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 4,487,049 ஆக இருந்தது.	விடுவிப்பதற்கும், வருமானத்திற்கு எடுப்பதற்கும் முடியுமான வைப்புக்களை எதிர்காலத்தில் விடுவிப்பதற்கும் வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 11 கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 852,040,467 ஆக இருந்ததுடன் அதில்	செலவினக் கடன்கொடுத்தோர் மற்றும் வேலைக் கடன்கொடுத்தோர் இரண்டு வருடங்களுக்கு	செலுத்த வேண்டிய மீதிகளில் இருப்பைக் கண்டறிந்து கடப்பாடுகளிலிந்து

	01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 844,838,794 தொகையும், 05 வருடங்களுக்கும் மேற்பட்ட பழைய மீதி ரூபா 7,201,673 உம் ஆகும்.	விஞ்சாதிருந்தமையால் உரிய கொடுப்பனவுகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.	விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுமதி ரூபா 62,424,874 ஆன 02 வாகனங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமல் சுட்டிக்காட்டப்பட் டுள்ள வாகனங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல சொத்துக்களும் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படல் வேண்டும்.
(ஆ)	பெறுமதி ரூபா 50,000 ஆன டெக்டெர் மற்றும் ரூபா 212,000 பெறுமதியான டபள் கெப் வண்டி பௌதீக ரீதியில் காணப்படவில்லை.	பதிவேடுகளை பரீட்சித்து எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் இருப்பு மற்றும் பாதுகாப்பை பரீட்சித்து பற்றாக்குறை தொடர்பாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்படல் வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களில் நீண்டகால இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்கான வேலைத்திட்ட மொன்று தயாரித்து கால ரீதியில் அமுல்படுத்துதல் சபையின் பொறுப்பாக இருந்த போதும் அது தொடர்பில் கவனம் செலுத்தாமையின் காரணமாக அலுவலகக் கட்டிடம் மற்றும் பொதுச் சந்தை அமைந்துள்ள கட்டிடங்களில் கட்டமைப்புக்கு ஏற்பட்டிருந்த இழப்பு தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக முழுமையான பராமரிப்பு தொடர்பில் தற்போது ஆபத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய நிறுவனங்களில் இருந்து அறிக்கை பெற்று மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	சபைக்குச் சொந்தமான கட்டிடங்களைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	குளியாப்பிட்டி நகர மண்டபத்தைக் கால ரீதியில் பழுதுபார்க்காமையின் காரணமாக நகர மண்டபத்தில் உள்ளக மற்றும் வெளியக தூண்களில் கீழ் மட்டத்தில் சேதமடைந்து வெடித்திருந்தமை, மண்டபத்தின் சுவர் வெடித்து பழுதடைந்திருந்தமை, கூரையின் சிவிலிம் பகுதி கழன்று சென்றிருந்தமை மற்றும் முன்பகுதியில் காணப்படுகின்ற கதிரைகள் போன்ற தூசுடன் உரிய பராமரிப்பின்றி காணப்படுகின்றமை போன்ற குறைபாடுகள்	குளியாப்பிட்டி நகர மண்டபத்தின் உள்ளக மற்றும் வெளியக வெடிப்புகள் மற்றும் சேதமடைந்தவைகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. மிகுதி வேலைகளுக்காக ரூபா 11,007,184 தொகையை மதிப்பீடு செய்யப்பட்ட துடன் நிதி ஏற்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேச இணைப்புக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நகர மண்டபத்தைப் திருத்தியமைத்து ஆகக் கூடிய வருமானத்தை உழைக்கின்ற வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	காணப்பட்டது. அதனால் நகர சபையின் பிரதான வருமானம் உழைக்கின்ற வழிகளிலும் நகர சபை எல்லையில் குடியிருக்கின்ற பொது பயன்பாடுகளை நிறைவேற்றுவதற்குரிய முக்கியமான சேவையினை வழங்குகின்ற பணிகளை நிறைவேற்றுவதற்கும் முடியாதிருந்தது.		
(உ)	தீயணைக்கும் வண்டிகள், 02 நீர் பௌஸர் வண்டிகள், டேலர் மற்றும் புல்வெட்டும் இயந்திரங்களுடன் எக்ரிமெக் கைடெக்டர் போன்ற சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	02 தண்ணீர் பௌஸர், டேலர் மற்றும் எக்ரிமெக் ஜெட் 5 கை டெக்டெருடன் புல் வெட்டும் இயந்திரத்திற்கான இலக்கத்துடன் புத்தகம் இல்லாதிருந்தமையால் உள்ளூராட்சி ஆணையாளர் (வடமேல்) மூலம் விசாரணை செய்து எதிர்பாலத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	பெறுமதி ரூபா 13,649,286 ஆன நிலையான சொத்துக்கள், நிலையான சொத்துப் பதிவேடு உள்ளடக்கி நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.	நிலையான சொத்துப் பதிவேடு சரி செய்து நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலையான சொத்துப் பதிவேடு சரிசெய்து அதன் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

3.4 இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	குளியாப்பிட்டி நகர சபையினால் புதிய பொதுச் சந்தை மற்றும் பல்நோக்கு கட்டிட நிர்மாணிப்பதற்காக ரூபா 996,631,284 தொகையில் 2020 யூலை 20 ஆம் திகதி ஒப்பந்தகார நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் 2025 மே 01 ஆம் திகதி வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. i. உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் கடன் பெறப்பட்டிருந்ததுடன் 2020 யூலை 20 ஆம் திகதி வரையில் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை செய்வதற்கு ஒருவருட காலம் தாமதம் ஏற்பட்டிருந்தது. ii. ஏற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியவள ஆய்வு அறிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து கடன் பெற்றுக்கொள்ளும் நோக்கம் முன்னர் மாத்திரம் சாத்தியவள ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	ஆலோசனைப் பொறியலாளர் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையால் (CIDA) வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதற்குரிய இணங்கப்பட்ட உடன் படிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் இதுவரையும் கிடைக்காதி ருந்ததுடன் வழங்கப்படுகின்ற பரிந்துரையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

iii. சபையினால் உரிய ஒப்பந்தகாரக் கம்பனியுடன் 2020 யூலை 20 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொவிட் நெருக்கடி எழுந்திருந்ததுடன் அதன் மூலம் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாகவும் விலை முரண்களை இனங்காண்பதற்கும் ஆலோசனை நிறுவனம் தவறியிருந்தது.

iv. கட்டிடத்தைத் திட்டமிடும் போதும் கட்டிடத்தை திட்டமிடும் போதும் பெறுகை நடவடிக்கைகளைக் கவனத்திற்கொண்டு கட்டம் கட்டமாக கட்டிடத் திட்டத்தை தயாரிப்பதற்கு கவனம் செலுத்தாமல் மத்திய மயப்படுத்தப்பட்ட வளிப்பதனாக்கி முறைமை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டமையால் முழுக் கட்டிடத்திற்கும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் செயற்படும் நிலைக்கு கொண்டுவரும் முறையில் தயாரிப்பதற்கும் அது தொடர்பாக நிதியத்தினைக் கவனத்தில் கொண்ட பின்னர் உரிய திட்டத்தை தயாரிப்பதற்கும் ஆலோசனைக் கம்பனி தவறியிருந்தது.

v. ஆலோசனைக் கம்பனி 2023 சனவரி 22 ஆம் திகதி வரையில் தமது ஆலோசனைப் பணிகளில் இருந்து விலகியிருந்ததுடன் 2019 ஒக்டோபர் 07 ஆம் திகதிய உடன்படிக்கையின் 2.10 ஆம் பிரிவின் பிரகாரம் தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சபை தவறியிருந்தது.

(ஆ)	மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 537,882,191 ஆன 16 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்படாத 05 வேலைகளுக்காக ரூபா 3,941,259 செலவிடப்பட்டிருந்தது.	நிதிப்பற்றாக்குறை, ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்காமை, தேவைகள் ஏற்படாமை, பல்நோக்கு கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.	சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு செயற் திட்டத்தைத் தெரிவு செய்தல் மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்பார்வையுடன் அமுல்படுத்துதல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 58 வெற்றிடங்கள் மற்றும் 01 மிகை காணப்பட்டதுடன் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	சிரேஷ்ட நிலை சிரேஷ்ட மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலை பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் வட மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப் படுகின்றமையால் வினைத்திறமை காண் பரிந்துரையுடன் அனுப்பப் பட்டுள்ளது.	வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 08 ஊழியர்களுக்குரிய ரூபா 326,515 அறவிடப்படாமல் ஊழியர் கடன் மீதியொன்று காணப்பட்டது.	உரிய கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை ஊழியர் கடன் அறவிடப்படல் வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் 05 வருமான விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 03 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையும், 07 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 09 சதவீதத்திற்கும் மேற்பட்ட முரண்களும் காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாதாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கட்டணங்கள் திருத்தப்பட்டமையினால் வருமானம் அதிகரித்துள்ளது.	பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.

4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 14,330,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு 34 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 2024 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் குளியாப்பிட்டி நகர சபையில் காணப்படுகின்ற நிதி நெருக்கடியின் இடையே அத்தியாவசிய நிகழ்ச்சித்திட்டங்களை மாத்திரம் மேற்கொள்வதற்கு முகாமைத்துவக் குழு தீர்மானம் எடுத்திருந்தது.	தேவையின் அடிப்படையில் இலக்குகள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.